## தி.மு.கழகக் கூட்டணி

# 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறும்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப்பெருந்தகை பேட்டி!



கொடைக்கானல், ஏப். 29 -

தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. 28 தொகுதிக்கும் குறைவாகவே ஜெயிக்கும் என்று செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலுக்கு தனது குடும்பத்தினருடன் ஓய்வுக்காக வந்திருந்த தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப்பெருந்தகை நேற்று முன்தினம் அளித்த பேட்டி வருமாறு :-

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. தலைமையில் தேர்தலை சந்தித்திருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் எழுதியுள்ள மகத்தான தீர்ப்பு மே 4ம் தேதி வெளியாகும். 200 தொகுதிகளுக்கு மேல் மதச்சார்பற்ற கூட்டணி வெற்றி பெறும்.

மீண்டும் முதல்வராகி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என முழங்குவார்.

என் வீட்டில் சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனை பற்றிய வெளிப்படைத்தன்மை இல்லாதது ஏன்? தற்போது வீடியோ ஆதாரங்கள் வெளியிடப்பட்டு உள்ளது. தி.மு.க. கூட்டணிக் கட்சி நிர்வாகிகளின் வீட்டில் சோதனை நடத்தப்பட்டுள்ளது. இதுபோல பா.ஜ., அ.தி.மு.க. கூட்டணிக் கட்சி நிர்வாகிகளின் வீட்டில் ஏன் சோதனை நடத்தப்படவில்லை? இது பற்றிய வெள்ளை அறிக்கையை சோதனை செய்தவர்கள் வெளியிட வேண்டும்.

5 ஆண்டுகள் முதல்வர் சக்தியை மீறி உழைத்துள்ளார். காலை உணவு திட்டம், நூற்றாண்டுகளுக்கு பின்பும் பேசப்படும். இது யதார்த்தமான உண்மை. எதுவுமே செய்யாமல் அமைச்சரவை பட்டியல் வெளியிடுபவர்களைப் பற்றி என்ன சொல்ல முடியும்? எங்கள் கூட்டணியில் தான் 50 சதவீதம் மேல் வாக்கு வங்கி உள்ளது. தே.மு.தி.க., மக்கள் நீதி மையம், சமுதாயம் சார்ந்த அமைப்புகள், இஸ்லாமிய அமைப்புகள் ஒன்றிணைந்து மிக பலமான கூட்டணியை அமைத்து உள்ளது.

ராகுல் காந்தி, ஐந்து மாநில தேர்தலில் கவனம் செலுத்தி வந்த நிலையில் அசாம், மேற்குவங்க தேர்தலுக்கு முக்கியத்துவம் கொடுத்து அங்கு தனது பரப்புரையை மேற்கொண்டார்.

அசாம், மேற்கு வங்கம் தான் எங்கள் டாஸ்க். என் அன்பு சகோதரர் ஸ்டாலினை விலைக்கு வாங்க முடியாது என்று ராகுல் காந்தி கூறி உள்ளார்.

தி.மு.க. தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2வது முறையாக முதலமைச்சராக பதவி ஏற்கும் போது அவரது பதவி ஏற்பு விழாவில் ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் கலந்து கொள்வார்கள்.

எதிர்க்கட்சி வரிசையில் காங்கிரஸ் தான் அமரும். காங்கிரஸ் வெற்றி பெறும் அளவிற்கு கூட அ.தி.மு.க. வெற்றி பெற முடியாது. 28 தொகுதிகளுக்கும் குறைவாகத்தான் அ.தி.மு.க. வெற்றி பெறும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வேலை வாய்ப்புக்கான தொழிலாளர் மேலாண்மையில் பட்ட, பட்ட மேற்படிப்பு —

# முதுநிலை பட்டய படிப்புகளில் சேர விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய இயக்குநர் அறிவிப்பு!

சென்னை, ஏப். 29 -

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்ட படிப்பு, எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) பட்ட மேற்படிப்பு மற்றும் பிஜி.டி.எல்.ஏ (தொழிலாளர் நிர்வாகத்தில் முதுநிலை மாலை நேர பட்டயப்படிப்பு), தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் (வார இறுதி) பட்டய படிப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) படிப்புகள் சென்னை பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பிஜி. டி.எல்.ஏ. மற்றும் டி.எல். எல் (ஏ.எல்.) படிப்புகள் தமிழக அரசின் அங்கீகாரத்துடன் நடைபெற்று வருகின்றது.

பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை, எம்.ஏ (தொழிலாளர் மேலாண்மை), பிஜி.டி.எல்.ஏ. மற்றும் டி.எல்.எல் (ஏ.எல்.) ஆகிய பட்ட / பட்டமேற்படிப்பு / பட்டய படிப்புகள் தொழிலாளர் நல அலுவலர் பதவிக்கு பிரத்யேக கல்வித் தகுதியாக தமிழ்நாடு தொழிற்சாலைகள் தொழிலாளர் நல அலுவலர் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளது. இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் மனிதவள மேம்பாட்டு மேலாளராக பணிபுரிந்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), எம்.ஏ (தொழிலாளர் மேலாண்மை), பிஜி. டி.எல்.ஏ. மற்றும் டி.எல். எல் (ஏ.எல்.) ஆகிய பட்ட / பட்டமேற்படிப்பு / பட்டய படிப்புகளுக்கு 2026 - 2027ம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகிறது. +2 முடித்த விருப்பமுள்ள மாணவர்கள் பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை), இளநிலை பட்டம் பெற்ற மாணவர்கள் எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) முதுநிலை பட்ட மற்றும் பட்டய படிப்புகளுக்கும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்ப வர்கள் மதிப்பெண் அடிப்படையில் அரசு விதிகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். தங்கும் விடுதி வசதி இளநிலை மற்றும் முதுநிலை பயிலும் ஆண் மாணவர்களுக்கு மட்டும்.

விண்ணப்பங்கள் 20.04.2026 அன்று முதல் வழங்கப்பட்டு வருகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் - 18.05.2026

விண்ணப்பகட்டணம் ரூ.200/

For SC/ST ரூ.100/ ★

★ (சாதிச் சான்றிதழ் நகல் தாக்கல் செய்ய வேண்டும்)

விண்ணப்பங்களை தபாலில் பெற, விண்ணப்ப கட்டணத்திற்கான ரூ.200/(SC/ST - ரூ. 100/) மற்றும் தபால் கட்டணம் ரூ.50/க்கான வங்கி வரைவோலையினை "The Director, Tamilnadu Institute of Labour Studies, Chennai" என்ற பெயரில் எடுத்து பதிவுத்தபால் / விரைவு அஞ்சல் / கொரியர் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மதிப்பெண் மற்றும் அரசு விதிகளின் அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மேலும் விவரங்களுக்கு : ஒருங்கிணைப்பாளர்கள் (சேர்க்கை)

முனைவர், எம்.காமராஜ், ஆராய்ச்சி அலுவலர் Mobile No. 8667754203

முனைவர் S. கார்த்திகேயன், உதவி பேராசிரியர்- Mobile No. 9965899822

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் மின்வாரிய சாலை, மங்களபுரம் (அரசு ஐ.டி.ஐ பின்புறம்) அம்பத்தூர், சென்னை 600 098. தொலைபேசி எண். 044 - 29567885 / 29567886. Email: tilschennai@tn.gov.in.

இவ்வாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அறிவித்துள்ளது.

## முரசொலி சுற்றுப்பயண ஆய்வாளர்

# க.தட்சணாமூர்த்தி - த.சியாமளாதேவி இல்லத் திறப்பு விழா!

## அமைச்சர்கள் — முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, ஏப். 29 -

முரசொலி சுற்றுப்பயண ஆய்வாளர் க.தட்சணா மூர்த்தி த.சியாமளாதேவி இல்லத்திறப்பு விழா அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், மாவட்ட செயலாளர்கள், கழகத் தோழர்கள் பங்கேற்கின்றனர்.

நிகழும் சித்திரை மாதம் க.ராதாகணேசன் மற்றும் க.செண்பகவள்ளி கன்னியப்பன் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் நாள்: 17ஆம் தேதி நாளை (30/04/2026), வியாழக்கிழமை இடம்: 145/1, பால்காரன் நடேசன் தெரு, வேளச்சேரி, சென்னை 600 042ல் புதியதாக கட்டியுள்ள இல்லத்தை அமைச்சர்ஆவடி சா.மு.நாசர் (சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் நலத்துறை) அவர்கள் எங்கள் இல்லத்தினை திறந்து வைக்கின்றார்.

இதில் அமைச்சர் மா. சுப்ரமணியன், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் தா.மோ.அன்பரசன், மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., திருத்தனி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., நே.சிற்றரசு எம்.சி., ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., மயிலை த.வேலு எம்.எல்.ஏ., க.சுந்தர் எம்.எல்.ஏ., வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் மற்றும் மாநில, மாவட்டக்கழக, பகுதி கழக, வட்ட கழக, நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் க.செந்தில்குமார், க.ஜெயகாந்தன், செ.பிரசன்னக்குமார், செ.மனீஷ்கண்ணன், ச.சுஜீத்குமார், ம.தியாகராஜன், கோ.திருக்குமரன், ம.சரண், ஜெ.விகாஷினி, ஜெ.விஷாலினி மற்றும் இளைஞரணி, மகளிரணி, மாணவரணி நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

த.கமலேஷ், த.அஸ்வின் நன்றி கூறுகின்றனர்.

## பா.ஜ.க. தலைவர்கள் பிரச்சாரம்!

# தேர்தல் ஆணையத்தில் திரிணாமுல் காங்கிரஸ் புகார்!

## மத்தியப்படை வாகனங்களைப் பயன்படுத்துவதாக குற்றச்சாட்டு!

கொல்கத்தா, ஏப். 29 -

மேற்குவங்கம் பா.ஜ.க. தலைவர்களின் பிரச்சாரத்துக்கு சி.ஆர்.பி.எஃப். வாகனங்கள் வீடியோ ஆதாரத்துடன் தேர்தல் ஆணையத்தில் திரிணாமுல் காங்கிரஸ் புகார் அளித்துள்ளது.

பா.ஜ.க. தலைவர்கள் பிரச்சாரத்துக்குச் செல்லும் இடங்களில் மத்தியப்படை வாகனங்களை பயன்படுத்துவதாக திரிணாமுல் காங்கிரஸ் குற்றம்சாட்டி உள்ளது. இதற்கான வீடியோ ஆதாரங்களையும் அக்கட்சி வெளியிட்டுள்ளது.

மேற்குவங்க மாநிலத்தில் இன்று ( 29ம் தேதி) 2ம் கட்ட வாக்குப் பதிவு நடைபெறுகிறது. இதற்கான பிரச்சாரம் நேற்று மாலை யுடன் ஓய்கிறது.

இந்நிலையில், திரிணமுல் காங்கிரஸ் தேர்தல் ஆணையத்திடம் புகார் மனு ஒன்றை அளித்துள்ளது. அதில், பா.ஜ.க. தலைவர்களின் பிரச்சாரத்திற்காக மத்தியப் படை வாகனங்கள் பயன்படுத்தப்படுவதாகவும், மத்தியப் படைகள் நடுநிலையைத் தவறி பா.ஜ.க.வுக்கு ஆதரவாகச் செயல்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பா.ஜ.க.வின் இந்த செயல் ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும், தேர்தல் ஆணையம் மௌனமாக வேடிக்கை பார்ப்பதாகவும் அந்த மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும், பா.ஜ.க. தலைவர் நிதின் நபின் சிஆர்பிஎஃப் வாகனத்தைப் பயன்படுத்தி பிரச்சாரம் செய்ததற்கான வீடியோ ஆதாரத்தையும் திரிணாமுல் காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

## புதுச்சேரியில் பிரெஞ்ச் மொழி நீக்கம்;

# இரயில்வே துறையில் 2 சதவீத பணியாளர்கள் குறைப்பு!

## ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கைக்கு வைகோ கடும் கண்டனம்!



சென்னை, ஏப்.29-

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஒன்றிய அரசின் இடைநிலை கல்வி வாரியத்தின் இயக்குநர் பிரக்யாசிங், புதுச்சேரி மாநிலத்தில் உள்ள சி.பி.எஸ்.இ. பள்ளி முதல்வர்களுக்கு ஓர் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார். அதன்படி, இந்தக் கல்வியாண்டு முதல் புதுச்சேரியில் சி.பி.எஸ்.இ. கல்வி முறையில் இயங்கி வரும் பள்ளிகளில் 6ம் வகுப்பிலிருந்து பிரெஞ்ச் மொழி நீக்கப்படும் என்று அறிவித்துள்ளது. அங்கு சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடைபெற்று புதிய அரசு பொறுப்பேற்க உள்ள சூழலில், அவசர அவசரமாக இந்த ஆணையை 7 நாட்களில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஒன்றிய பாஜ அரசு அறிவித்துள்ளது. புதுச்சேரி மாநிலத்தில் அரசு பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கையும், அங்குள்ள தனியார் பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம் பிரெஞ்ச் எனும் மும்மொழிக் கொள்கையும் நடைமுறையில் உள்ள சூழலில் அங்குள்ள அரசு பள்ளிகள் சி.பி.எஸ்.இ. பள்ளிகளாக பெரும்பாலும் மாற்றப்பட்டுவிட்டன.

இப்படிப்பட்ட சூழலில், புதிய மொழிக் கொள்கையைக் காரணமாகக் காட்டி ஒரு வெளிநாட்டு மொழியை மட்டும்தான் படிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, ஆங்கில மொழியை வைத்துக் கொண்டு பிரெஞ்ச் மொழியை அகற்றும் பணியில் ஒன்றிய பா.ஜ. அரசு முனைந்துள்ளது. புதுச்சேரி மாநிலம் பிரெஞ்ச் கலாச்சாரத்தோடு தொடர்புடைய மக்கள் வாழும் மாநிலமாகும். இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் புதுச்சேரியிலும் பிரெஞ்சிலும் இன்னமும் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழலில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பிரெஞ்ச் மொழி படித்த மாணவர்களின் எதிர்காலம் அங்கு கேள்விக்குறியாகி உள்ளது. பிரெஞ்ச் மொழி கற்பித்த ஆசிரியர்களின் வேலை குறித்த கவலையும் அங்கு ஏற்பட்டுள்ளது. எனவே ஒன்றிய பா.ஜ. அரசின் இந்த நடவடிக்கைக்கு கடுமையான கண்டனத்தைத் தெரிவிப்பதோடு, மீண்டும் பிரெஞ்ச் மொழியை அங்குள்ள பள்ளிகளில் கற்பிப்பதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மேலும் உள்ள

● மேகதாது அணை குறித்து ஒரு சார்பாக விவாதித்து முடிவெடுக்கப்படும் ஆபத்து; காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தை ஒத்திவைக்க அன்புமணி வலியுறுத்தல்'

● திருப்பதி கோயில் உற்சவம் 2ம் நாள் மலையப்ப சுவாமி குதிரை வாகனத்தில் பவனி'

● மும்பையில் இரவு நேரத்தில் தர்பூசணி பழம் சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் உயிரிழப்பு'

● தரம் இல்லாத கேன் குடிநீர் விற்றால் ரூ.5,000 அபராதம் விதிக்கப்படும்: குடிநீர் விற்பனை நிறுவனங்களுக்கு உணவு பாதுகாப்புத் துறை எச்சரிக்கை'

இதைப் போலவே, ஒன்றிய பா.ஜ. அரசு ரயில்வே துறையில் ஆள் குறைப்பு என்ற அநீதியை ஆரவாரமின்றி இழைத்துள்ளது. ரயில்வே வாரியத்தின் சார்பில், ரயில்வே துறையின் மண்டல பொது மேலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில், ரயில்வே துறையின் பணியாளர்களை 2 சதவீதம் அளவு குறைக்க வேண்டும் என்று அறிவித்துள்ளது. இதன்படி ரயில்வே துறையில் 29,608 பணியிடங்கள் குறைக்கப்படக் கூடிய அபாயம் நிகழ உள்ளது. தெற்கு ரயில்வேயில் மட்டும் 1906 பணி இடங்களும், ஐ.சி.எப். நிர்வாகத்தில் 217 பணியிடங்களுக்கும் இதன் மூலம் அகற்றப்படும்.

ரயில்வே துறையில் உள்ள 14.8 லட்சம் பணியிடங்களில் தற்போது 11 லட்சம் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு உள்ளன. 3 லட்சம் பணி நியமனங்கள் நிரப்பப்படாத சூழ்நிலையில் அங்குள்ள பணியாளர்கள் கூடுதல் சுமையுடன் பணியாற்றி வருகிறார்கள். வேலை இல்லா திண்டாட்டம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வரும் சூழ்நிலையில், ஒன்றிய அரசின் இந்த ஆள் குறைப்பு நடவடிக்கை தொழிலாளர் விரோத நடவடிக்கை ஆகும். இதை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தமிழ்நாடு விவசாயிகள் — தொழிலாளர்கள் கட்சி சார்பில்

# சர்வதேச தொழிலாளர்கள் நினைவு நாளையொட்டி கருத்தரங்கம்!

## பொன்குமார் — முக்கிய பிரமுகர்கள் சிறப்புரை!



சென்னை, ஏப். 29 -

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர் கட்சி தலைவர் பொன் குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பாதுகாப்பில்லாத பணியின் காரணமாக உலக அளவில் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கானத் தொழிலாளர்கள் விபத்தின் காரணமாக தங்களுடைய இன்னுயிரை இழக்கின்றனர். கை, கால், கண்களை இழந்து ஊனமாகின்றனர்.

இந்த நிலையை மாற்றுவதற்கு பணியிடப் பாதுகாப்பு என்பது மிக மிக முக்கியமான ஒன்றாகும். தொழிலாளர்களுக்கு பணியிட பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டியது ஒவ்வொருவரின் கடமை என ILO வலியுறுத்துகிறது.

இப்படி பாதுகாப்பற்ற பணியின் காரணமாக பாதிக்கப்பட்டத் தொழிலாளர்களை நினைவு கூர்ந்து, எதிர்காலத்தில் இந்த நிலையை தவிர்த்து, பாதுகாப்பானப் பணியை உறுதி செய்வதற்காக ஐக்கிய நாடுகள் மன்றம் ஏப்ரல் 28ஆம் தேதி உலகத் தொழிலாளர்கள் நினைவு நாளாக அறிவித்துள்ளது.

அந்த நாளை உலகம் முழுவதும் பேரணி, பொதுக்கூட்டம், கருத்தரங்கு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் கொண்டாடி வருகின்றன. அன்றைக்கு தொழிலாளர்கள் பாதுகாப்பான பணிக்கான உறுதியை ஏற்பார்கள்.

அந்த அடிப்படையில் நேற்று (ஏப்ரல் 28) தொழிலாளர் நினைவு நாளை தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சி மற்றும் தமிழகக் கட்டடத் தொழிலாளர்கள் மத்திய சங்கத்தின் சார்பில் கருத்தரங்கு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியில் தலைவர் பொன் குமார் உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு பணியிடப் பாதுகாப்பு குறித்து சிறப்புரையாற்றினர்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# கூடங்குளம் 3-வது அலகு சோதனை தொடக்கம்!

நெல்லை, ஏப். 29 -

கூடங்குளம் அணுமின் நிலையத்தின் 3வது அலகு இயங்கத் தொடங்குவதற்கான முக்கிய செயல்முறை சோதனை தொடங்கியுள்ளதாக, இந்திய அணுசக்தி மின்கழகத்தின் நிர்வாக இயக்குனர் பிரதீக் அகர்வால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்திய அணுசக்தி மின்கழக நிர்வாக இயக்குனரும், மூத்த விஞ்ஞானியுமான பிரதீக் அகர்வால் வெளியிட்டுள்ள அறிக்கையில், கூடங்குளம் அணுமின் திட்டத்தில் 3வது அலகு திறந்த அணு உலைக்குள் நீர்ப்பாய்ச்சும் செயல்பாடு நிகழ்வு வெற்றிகரமாக தொடங்கிளயதாகவும், இந்த செயல்பாடு அணுமின் நிலையத்தை இயங்கத் தொடங்கும் செயல்முறையின் ஒரு முக்கியமான திட்டமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

அணுமின் நிலையத் தின் பாதுகாப்பு அமைப்புகளையும், முக்கிய குளிரூட்டும் குழாய்களையும் மென்நீர் கொண்டு கழுவி சுத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அணுமின் நிலையத்தின் வடிவமைப்பு தேவைகளுக்கு இணங்க முதன்மை அமைப்பின் உபகரணங்கள் மற்றும் குழாய்களு க்கான தனித்தனி செயல்பாட்டு சோதனை தொட ங்குவதை இந்த நிகழ்வு குறிப்பதாகவும் பிரதீக் அகர்வால் குறிப்பிட்டு ள்ளார்.

இந்த சோதனை அணுமின் நிலையத்தை முழுமையான செயல்பாட்டிற்கு கொண்டு வருவ தற்கு ஒரு மிக முக்கிய படியாகும் என கூறியுள்ள அவர், கூடங்குளம் அணுமின் நிலையத்தில் முதல் மற்றும் 2வது அலகுகள் முழுவீச்சில் செயல்பட்டு இதுவரை சுமார் 121 பில்லியன் அளவிலான தூய்மையான மின்சாரத்தை உற்பத்தி செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், 4வது அலகின் கட்டுமானப் பணிகள் தற்போது மிகவும் மேம்பட்ட நிலையில் உள்ளதாகவும், 5 மற்றும் 6வது அழகின் கட்டுமானப் பணிகள் அடுத்த கட்டத்தை எட்டி உள்ளதாகவும், அனைத்து அலகுகளின் பணிகளும் முடிந்து திட்டம் முழுமையாக செயல்படும் பட்சத்தில் 6000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி கூடங் குளத்தில் நடைபெறும் என்றும் பிரதீக் அகர்வால் தெரிவித்துள்ளார்.

## தேனி மாவட்டம் — வீரபாண்டி கௌமாரியம்மன் கோயில்

# கண்ணகி கோயில் சித்திரை பெருந்திருவிழா முன்னேற்பாடுப் பணிகள்!

## மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அதிகாரிகள் ஆய்வு!

தேனி, ஏப்.29-

தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், தமிழ்நாடு - கேரள எல்லையில் அமைந்துள்ள மங்கலதேவி கண்ணகி கோயில் சித்திரை முழு நிலவு விழா மற்றும் வீரபாண்டி கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரை பெருந்திருவிழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் 27.4.2026 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு-கேரள எல்லையில் அமைந்துள்ள மங்கல தேவி கண்ணகி கோயில் சித்திரை முழு நிலவு விழா ஆண்டுதோறும் சித்ரா பௌர்ணமி தினத்தன்று தமிழக-கேரள மக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது, இவ்வாண்டு 01.05.2026 அன்று திருவிழா நடைபெற உள்ளதையொட்டி, இத்திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு செய்ய இருப்பதால் தமிழ்நாடு மற்றும் கேரள பக்தர்கள் குமுளியில் இருந்து கோவிலுக்கு செல்லுவதற்கு ஏதுவாக போக்குவரத்து வசதி, சுகாதாரம், குடிநீர், தற்காலிக பந்தல்கள் மற்றும் கழிப்பிட வசதி, பாதைகள் செப்பனிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, வீரபாண்டியில் அமைந்துள்ள கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரை பெருந்திருவிழா ஆண்டுதோறும் வெகுவிமர்சியாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு 12.05.2026 முதல் 19.05.2026 வரை 8 நாட்கள் திருவிழா நடைபெற உள்ளது. இத்திருவிழாவில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு, தரிசனம் செய்ய உள்ளார்கள். மேலும் தேரோட்ட திருவிழா 15.5.2026 அன்று நடைபெற உள்ளது.

இத்திருவிழாவில் பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி தரிசனம் செய்திட ஏதுவாக போக்குவரத்து வசதி, சுகாதார வசதி, தற்காலிக பந்தல்கள், தற்காலிக கழிப்பிட வசதி,

இரு சக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், பக்தர்கள் வசதிக்காக ஆங்காங்கே குடிநீர் தொட்டிகள் அமைத்தல், அனைத்து முக்கிய சந்திப்புகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் அளவு மின் விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்வது தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மேலும், குழந்தைகளுக்கான பொழுது போக்கு அம்சங்களுடன் அமைக்கப்படவுள்ள இராட்டினங்கள் மற்றும் தற்காலிக கடைகள் அனைத்திற்கும் காப்பீடு (insurance) கட்டாயம் வேண்டும் என்றும், அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு இராட்டினங்கள் அமைக்கப்பட்ட பின்னரே அதனை இயக்குவதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேற்குறிப்பிட்ட திருவிழாக்களில் பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குவது, தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவது, சுகாதாரத்துறை மற்றும் தீயணைப்புத் துறை, வனத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்களுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இத்திருவிழாக்களை சிறப்பாக கொண்டாட ஏதுவாக கூடுதல் முன்னேற்பாடு பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா, மாவட்ட வன அலுவலர் கிரண், பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத்பீடன் உதவி வனப்பாதுகாவலர் சாய்சரண் ரெட்டி, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி தமிழரசி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ராமகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இணை இயக்குநர் மரு.கலைச்செல்வி, மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, நியமன அலுவலர் (உணவு பாதுகாப்புத்துறை) திருமதி சசிதீபா உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சையத் முகைதீன் இப்ராஹிம், செய்தி மக்கள் தொடர் அலுவலர் ஏ. எடிசன், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மாணிக்கம் மற்றும் வருவாய்த்துறை, வனத்துறை, போக்குவரத்துத் துறை, சுகாதாரத்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.